# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 176/2025 LW– 1 PW– 1

Name : விஜயன் ( புகார்தாரர்)

Father's Name : சின்னு

Village : பூசாரிபட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 52/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை போலீசார் எனக்கு சம்பவத்தன்று மருத்துவமனையில் வைத்து அடையாளம் காட்டினார். கடந்த 11.06.2025ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் சிறுகுடியிலிருந்து சமுத்திராபட்டி செல்லும் வழியில் தேத்தாம்பட்டி பிரிவில் என் மகன் TN 57 CW 4243 என்ற பதிவெண்கொண்ட TVS அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் எங்கள் தோட்டத்தில் இரவு காவல் செய்வதற்காக சென்றிருந்தபோது பல்சர் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எங்கள் ஊரைச்சேர்ந்த அஜ்மீர் காஜா என்பவர் சமுத்திராப்பட்டியிலிருந்து வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது சம்பவத்தை பார்த்ததாக எங்களுக்கு வீட்டிற்கு வந்து தகவல் சொன்னார்.

2) அதன்பேரில் நாங்கள் சம்பவ இடம் சென்று பார்த்தபோது என் மகன் அடிபட்டு வைக்கோல் போற் அருகில் கிடந்தார். என் மகனுக்கு பின்பக்க

தலையிலும், இடதுபக்க தோள்பட்டை மற்றும் கால் வரை பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. சுயநினைவின்றி இருந்தார். அவருக்கு மூக்கிலும், வாயிலும் ரத்தம் வடிந்திருந்தது. சம்பவ இடத்தில் ஆட்கள் கூடியிருந்தார்கள். ஆங்காங்கே வாகனங்கள் நிறுத்தியிருந்தார்கள். என் மகனின் இருசக்கர வாகனம் சாலையின் நடுவில் கிடந்தது. என் மகன் மீது மோதிய வாகனம் சம்பவ இடத்திலேயே இல்லை. அருகிலிருந்தவர்கள் 108 அவசர ஊர்திக்கு தகவல் சொல்லியிருந்தும் வர தாமதமானதால் பதற்றத்திலிருந்த நானும், அருகிலிருந்தவர்களும் அவ்வழியாக வந்த என் மகனின் நண்பரின் காரான 7500 என்ற பதிவெண்கொண்ட காரில் ஏற்றி நத்தம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அப்போது அவ்வழியாக வந்த 108 அவசர ஊர்தியிலிருந்த பணியாளர்கள் சமுத்திராப்பட்டி அருகில் வரும்போது எங்களை நிறுத்தி என் மகனை பரிசோதித்து பார்த்துவிட்டு இறந்துவிட்டதாக கூறினார்கள்.

பின்னர் நாங்கள் அரசு நத்தம் மருத்துவமனை கொண்டு சென்று என் மகனின் இறப்பை உறுதி செய்துகொண்டோம். அப்போது அங்கு காவலர்கள் வந்து பார்த்துக்கொண்டிருந்தபோது என் மகனின் வாகனத்தின் மீது மோதிய இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் காயம்பட்டு சிகிச்சைக்காக அங்கு வந்திருந்தார்கள். அவர்களை போலீசார் அடையாளம் காட்டியபோது அவர்களுக்கு கைகளில் காயம் ஏற்பட்டு மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு புறப்பட்டு கொண்டு இருந்தார்கள். அதில் ஆஜர் எதிரியும், மற்றொரு நபரும் இருந்தார்கள். பின்னர் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. (**புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

3) நான் சம்பவம் கேள்வி பட்டு சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த பொழுது நிறைய நபர்கள் இருந்ததால் யாரால் விபத்து ஏற்பட்டது என்று அப்போது

பார்க்கவில்லை என்றால் சரிதான். என் மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் ஆனது டிவிஎஸ் அப்பாச்சி RR 310 என்றாலும், அது அதிவேக திறன்கொண்ட 312.5 CC இயந்திர திறன் கொண்ட பந்தய வாகனம் என்றாலும் சரிதான். ஆனால் வண்டியின் வேகத்தை கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதனால் பந்தய வாகனம் கிடையாது. சம்பவத்தின்போது என் மகன் தலைகவசம் அணிந்திருந்தாரா என்றால் இல்லை. நான் தோட்டத்தில் படுத்திருந்தேன். எனது தோட்டம் சம்பவ இடத்திலிருந்து மேற்கே தேத்தாம்பட்டியிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. நான் கேள்விபட்டு தான் சம்பவ இடம் வந்தேன். என் மனைவி தகவல் சொன்னார். அஜ்மீர் காஜா என்பவர் வீட்டில் வந்து எனது மனைவியிடம் தகவல் சொன்னார் என்றால் சரிதான்.

4) என் மகனை நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்த போது எவ்வாறு விபத்து நேரிட்டது என்று கேட்டார்கள் என்றால் சரிதான். விசாரித்தது நத்தம் போலீசார் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று இரவே புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. சம்பவம் யாரால் நடந்தது என்று தெரியாததால் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் ஆனது சம்பவம் நடந்த மறுநாள் காலை 11 மணியளவில் கொடுக்கப்பட்டது. போலீசார் என் மகன் மீது தவறு இருப்பதாக சொல்லி எனது புகார் மீது வழக்கு பதிவு செய்ய முடியாது என்று மறுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். பின்னர் உறவினர்களும், எங்கள் ஊர் காரர்களும் சேர்ந்து வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சாலை மறியல் செய்வதாக தெரிவித்தோம் என்றால் சரியல்ல. இரவு சம்பவம் நடந்து மதியம் மூன்று மணி வரை போஸ்ட்மார்ட்டம் செய்யாமல் இருந்ததாலும், வழக்கு பதிவு செய்யாமல் இருந்ததாலும் மருத்துவமனையில் காவல் நிலையத்திலிருந்து

எவ்வித தகவலும் வரவில்லை என்று தெரிவித்ததாலும் சாலை மறியல் செய்யப் போவதாக அறிவித்தோம். நாங்கள் சாலை மறியல் செய்வதாக அறிவித்த பிறகு தான் போஸ்ட்மார்டம் செய்தார்கள் என்றாலும் வழக்கு பதிவு செய்தார்கள் என்றாலும் சரிதான்.

5) காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை யார் எங்கு வைத்து எழுதினார் என்றால் காவல் நிலையத்தில் வைத்து யார் எழுதியது என்று ஞாபகம் இல்லை, எனது உறவினர்களில் ஒருவர்தான் எழுதினார். அதை நான் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். புகாரை யாராவது படித்துக் காண்பித்தார்களா என்றால் இல்லை. அப்போது இருந்த மனநிலையில் அதை கவனிக்கும் நிலையில் நான் இல்லை. எனது மகன் வெளிநாடு செல்வதற்கு ஆயத்தமாக இருந்தார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எனது மகன் தோட்டத்திற்கு காவலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல.

6) எனது மகன் வெளிநாடு செல்ல இருப்பதால் அவரது நண்பருக்கு பார்ட்டி கொடுப்பதற்கு சென்றிருந்தார் என்றாலும், சந்தோஷத்தில் அவரது வாகனத்தை அதிவேகமாக இயக்கி ரோட்டில் இருந்த மைல்கல்லில் இடித்து அருகில் வந்த வாகனத்திலும் இடித்து விபத்தை ஏற்படுத்தி விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த விபத்திற்கு வேறு யாரும் காரணம் இல்லை என்றால் சரியில்ல, அதனால்தான் எனது புகாரின் மீது வழக்கு பதிவு செய்ய காவல்துறையினர் மறுத்தார்கள் என்றாலும் சரியல்ல. காவல்துறையினரை மிரட்டி எதிரி மீது இந்த வழக்கு பதிவு செய்ய வைத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**இந்த விபத்திற்கு எதிரியோ மற்ற நபர்களோ காரணம் இல்லை என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.06 15:24:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 176/2025 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | : ரமேஷ் ( காயம்பட்ட சாட்சி) |
| Father's Name | : கண்ணன் |
| Village | : தேத்தாம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 41/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மைத்துனர் ஆவார். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் இரவு சுமார் 10.30 முதல் 11.00 மணியளவில் தேத்தாம்பட்டி அருகில் ஆஜர் எதிரியான என் மைத்துனர் ராதாகிருஷ்ணன் என்பவர் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தில் என்னை பின்னால் அமர்த்தி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஒட்டிக்கொண்டு வந்தபோது, எங்களுக்கு பின்புறம் அதே திசையில் வந்த ரேஸ் ஓட்ட பயன்படுத்தும் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனக்கு வலது முழங்கையில் எலும்பு முறிவு எற்பட்டது. ஆஜர் எதிரிக்கு கை, கால், முகங்களில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டுஇருந்தது. எங்கள் வாகனத்தின் மீது மோதிய வாகனத்தில் வந்த நபர் இறந்துவிட்டதாக மறுநாள் நான் கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் நானும், ஆஜர் எதிரியும் இருசக்கர வாகனத்தில் அதிக வேகமாக வந்து இவ்வழக்கில் இறந்துபோன மணி என்பவரின் வாகனத்தின் மீது மோதி அவருக்கு இறப்பை ஏற்படுத்தினோம் என்றும், எதிரி எனக்கு மைத்துனர் என்பதால் உண்மையை மறைத்து எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

3) இவ்வழக்கில் இறந்து போன மணி என்பவர் எவ்வளவு வேகத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால், எங்களுக்கு பின்னால் வந்ததால் வேகத்தை சொல்ல இயலவில்லை. ஆனால் அதிவேகமாக தான் வந்தார். சம்பவம் நடந்த போது அருகில் யாரும் இருந்தார்களா என்றால் இல்லை, நாங்கள் காப்பாற்றுங்கள் என்று சத்தம் போடவும் அருகில் குடியிருப்பவர்கள் வந்து தண்ணீர் கொடுத்தார்கள் மயக்கம் ஆகிவிட்டேன். எனது ஊரை சேர்ந்தவர்கள் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள் அப்போதும் இந்த விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். ரேஸ் பைக்கில் வந்த நபருக்கு என்ன ஆனது என்று அப்போது தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் தேத்தம்பட்டி என்றால் சரிதான். எனது ஊருக்கு அருகில் விபத்து நடந்தது என்னால் சரிதான். சமுத்திராப்பட்டி –சிறுகுடி செல்லும் கிராம சாலை ஆனது மேடு பள்ளமாக இருக்கும் என்றால் சரிதான். நான் அடிக்கடி அந்த சாலையை பயன்படுத்துவேன் என்றால் சரிதான். அந்த சாலையில் மெதுவாக தான் வாகனங்கள் செல்ல முடியும் என்றால் சரிதான் எனது மைத்துனர் அன்றைய தினம் மெதுவாகத்தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். 25 கிலோமீட்டர் வேகத்தில் சென்றோம் என்றால் சரிதான். ரோட்டின் இடது புறமாக சென்று

கொண்டிருந்தோம் என்றால் சரிதான். பின்னாலிருந்து வாகனம் வந்து மோதும் என்று எதிர்பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்த சாலையில் 50 கிலோமீட்டர் வேகத்திற்குள் தான் ஓட்ட முடியும் என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.06 15:24:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.176/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 176/2025 LW- 3 PW- 3

Name : அஜ்மீர் காஜா ( கண்ணுற்ற சாட்சி)

Father's Name : அப்பாஸ்

Village : பூசாரிபட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 40/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து மீன் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. அ.சா.1ஐ தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன அ.சா.1ன் மகன் மணி என்பவரை தெரியும். சுமார் 7, 8 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 10.30 மணிக்கு மேல் தேத்தாம்பட்டியை தாண்டியுள்ள சக்திமுருகன் கிரசரின் அருகில் உள்ள பேக்டரியின் அருகே நான் நத்தத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது கூட்டமாக இருந்தார்கள். அப்போது சாலையின் நடுவில் இறந்துபோன மணி என்பவரின் இருசக்கர வாகனம் கிடந்தது. நான் கூட்டத்தை விலக்கி பார்த்தபோது மணி என்பவர் அடிபட்டு கிடந்தார். எனவே, அவர் எங்கள் ஊர்க்காரர் என்பதால் அவரது வீட்டிற்கு சென்று தகவல் சொன்னேன். அதன் பின்னர் இறந்துபோன மணி என்பவரின் அம்மாவையும், அண்ணனையும் சம்பவ இடத்திற்கு கொண்டுவந்து இறக்கிவிட்டேன். பின்னர் மறுநாள் காலையில்

நான் விசாரித்தபோது மணி என்பவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

3) நான் சம்பவ இடத்தில் வைத்து பார்த்த மணி என்பவரது இருசக்கர வாகனம் ஆனது ரேஸ் வண்டி என்றால் சரிதான். அவர் எந்த நேரத்தில், எவ்வாறு அடிபட்டு கீழே கிடந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கூட்டமாக இருந்தவர்கள் யார் என்று தெரியாது என்றால் சரிதான். சம்பவம் எவ்வாறு நடந்தது என்று விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.06 15:24:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்